மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண். 24/2021**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.பாண்டிசிவகாமி, கிரேடு III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்:அங்காளஈஸ்வரி<br>(முத்துராமலிங்கபுரம் கிராம நிர்வாக அலுவலர்) (பி.வா.சா.2)<br>த/பெ.க/பெ :<br>கிராமம் :<br>தாலுகா : | மதம் :<br>தொழில் :<br>வயது : |

02.06.2026

**முதல் விசாரணை –**

நான் முத்துராமலிங்கபுரம் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். திருச்சுழி தாலுகா, முத்துராமலிங்கபுரம் கிராம நத்தம் சர்வே எண்.181/3–ற்கான அடங்கல் அசல் ஆவணத்தினை கொண்டு வந்துள்ளேன். அதனுடைய சான்றிட்ட நகல் **சாசாஆ1** ஆகும். வடக்கே ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி உள்ளது, தெற்கே சர்வே எண்.180–ற்கான காலியிடம் உள்ளது, கிழக்கே சர்வே எண்.181/4–ற்கான ரோடு உள்ளது, மேற்கே புஞ்சை நிலம் உள்ளது. சர்வே எண்.181/3 –ல் செங்கல்லால் கட்டப்பட்டு மேலெ ஓடு போட்ட ஒரு கட்டிடம் உள்ளது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை –**

1. நான் எத்தனை வருடமாக முத்துராமலிங்கபுரம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக இருந்து வருகிறேன் என்றால் ஒரு வருடமாக பணியாற்றி வருகிறேன். பள்ளிக்கூடம் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண். 181/2ல் உள்ளது. சர்வே எண் 181/3ற்கும் பள்ளிக்கூடத்திற்கும் சம்பந்தம் கிடையாது என்றால் சரிதான். ஜெயராமன் எப்போது இறந்தார் என்று விசாரித்தேனா என்றால் ஆமாம், பல வருடங்கள்

ஆனதாக சொன்னார்கள். அந்த வீட்டை யார் அனுபவம் செய்தார்கள் என்று விசாரணை செய்தேனா என்றால் அதனை யாரும் பயன்படுத்துவதாக எனக்கு தெரியவரவில்லை. எவ்வாறு சொல்கிறேன் என்றால் ஒரு வருடமாக யாரும் அதனை பயன்படுத்துவதாக தெரியவில்லை. மேற்படி இடத்திற்கு எப்போது சென்றேன் என்றால் தினசரி அந்த பகுதிக்கு செல்வேன். சர்வே எண். 181/3–ல் ஜெயராமன்தான் வீடு கட்டினார் என்பதை விசாரித்து தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அதில் கதவு எண் போடப்பட்டுள்ளதா என்றால் அதனை பார்க்கவில்லை, ஆனால் வீட்டிற்கு ரசீது தற்போது வரை போட்டுக்கொண்டுதான் உள்ளார்கள்.

2. யார் பெயரில் வீடு உள்ளதோ அவர்கள் பெயரில்தான் ரசீது போட்டு தருவார்கள் என்றால் சரிதான். சொத்தினை நாகலட்சுமி அனுபவிப்பதால்தான் அவருக்கு ரசீது போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வீடானது ஆக்கிரமிப்பில் உள்ளதாக வருவாய் துறையில் இருந்து எந்தவித அறிவிப்பும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்தை பார்க்கவில்லை என்றாலும் வழக்கிற்காக தாவா சொத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கு அரசாங்கத்தால் 4/178 என கதவு எண் கொடுக்கப்பட்டு வாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. சர்வே எண். 181/3 அனைத்தும் சர்க்கார் புறம்போக்கு என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சொத்தானது ஜெயராமனுக்கு 1980ல் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் என்றாலும் வருவாய் ஆவணங்களில் தவறுதலாக சர்க்கார் புறம்போக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எப்போது கட்டுமானம் கட்டப்பட்டது என்று எனக்கு தெரியுமா

என்றால் 15 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டதாக விசாரணையில் தெரிந்து கொண்டேன். யார் யாரை விசாரித்து தெரிந்து கொண்டேன் என்றால் பொது மக்களை விசாரித்தேன். அவர்கள் பெயர் தெரியுமா என்றால் பெயர் தெரியாது. எழுத்து மூலமாக வாக்குமூலம் வாங்கினேனா என்றால் இல்லை. நான் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும் கட்டிடம் கிரையம் வாங்கியபோதே கட்டப்பட்டது என்றால் சரியல்ல.

(1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது).

**மறு விசாரணை –**

இல்லை.